தலைமையிலேதான் பெரும் தலைவர் காமராஜர் அவர்கள் அந்த வைக்கம் போராட்டத்திலே கலந்து கொண்டார்கள். தந்தைப் பெரியார் தளபதியாக செல்லுகிறபோது அவர்களுக்கு தக்க துணைவராக காமராஜ் அவர்கள் இளம் வயதிலேயே சென்றார். அப்பொழுது திருவனந்தபுரத்திலே உறவினருடைய கடையிலே பணிபுரிந்து கொண்டிருந்த காரணத்தினாலே சென்றார். செல்லு கிறபோது பாரதியாருடைய பாடல், அச்சமில்லை, அச்சமில்லை என்று பாடுகிறபோது மேல் ஜாதிக்காரர்கள் அங்கே நின்று, எந்தா, இய்யால், அச்சமில்லை, அச்சமில்லை என்று பரையிது, என்று கிண்டல் கூட செய்தார்களாம். எனவே, தந்தைப் பெரி யார் அவர்களுக்கு அந்த நினைவுச் சின்னம் எழுப்புகிறபோது அங்கே வரலாற்றுச் செய்திகளை வைத்து, பெரும் தலைவரை பச்சை தமிழன் என்று எந்த காமராஜரை குறித்திருக்கிறாரோ, அந்த பச்சை தமிழனே அவர்களுக்கு துணையிருந்தார் என்பது சரித்திரத்திலே முக்கியமான இடத்தை பெறும், அது செய்யப் படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, காங்கிரஸ் இயக்க வரலாற்றில், திராவிட இயக்க வரலாறு இடம் பெறுமோ, பெறாதோ தெரியாது. ஆனால் திராவிட இயக்க வரலாற்றில் காங்கிரஸ் இயக்க வரலாறு நிச்சயமாக இடம் பெறும். காமராஜருடைய வரலாற்றில் பெரியாருடைய வாழ்க் கைக் குறிப்பு இடம் பெறுகிறதோ பெறவில்லையோ எனக்குத் தெரியாது, ஆனால் பெரியாருடைய வாழ்க்கை வரலாற்றில் காமராஜருடைய வாழ்க்கை வரலாறு நிச்சயமாக இடம் பெறும் (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. குமரி அனந்தன் : மிக்க மகிழ்ச்சி. ஆனால் வைக்கம் போராட்டம் நடக்கிறபோது தந்தை பெரியார் காங்கிரஸ் கமிட்டியின் தலைவர்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நீங்கள் காலம் கடந்துதான் இதையெல்லாம் எண்ணிப் பார்க்கிறீர்கள். (சிரிப்பு)

கால்நடை மருத்துவமனை.

*3118. **திரு. வி. பி. இராசன் :** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

இராசபாளையம் தொகுதி சொக்கநாதன் புத்தூரில் கால் நடை மருத்துவமனை துவங்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. வி. பி. இராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொக்கநாதன்புத்தூரில் கிட்டத்தட்ட 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகள் உள்ளன. பக்கத்து ஊர்களிலும் மேல்துரைசாமிபுரம், கோவிலூர் போன்ற கிராமங்களிலும் உள்ளன. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த சொக்கநாதன்புத்தூரில் கால்நடை மருத்துவமனை அமைப்பதற்கு இனிமேலாவது முயற்சிகள் மேற்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொக்கநாதன்புத்தூருக்கு அருகிலே சேத்தூர் மற்றும் சிவகிரி ஆகிய இடங்களிலே இரண்டு கால் நடை மருந்தகங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதோடு இந்த ஊராட்சி எல்லைக்கு அருகாமையிலே ஒரு 8 கிளை நிலையங்களும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அப்படிப் பட்ட சூழ்நிலையில் தற்போது அங்கு கால்நடை மருந்தகம் தேவையில்லை என்று துறை கருத்து தெரிவித்திருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. பி. இராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொக்கநாதன்புத்தூரில் ஏற்கெனவே மாவட்ட ஆட்சியர் வருகை தந்தபோது, மனு நீதி நாளில், அந்த பொது மக்கள் மனு கொடுத்து, இதை நிச்சயமாக நாங்கள் செய்கிறோம் என்று வாக்குறுதியை அதிகாரிகள் ஏற்கெனவே தந்திருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது போல் சிவகிரி சென்றால் இது வேறு மாவட்டம் என்று அங்கே இவர்களுக்கு அந்த கால்நடைகளுக்கு மருத்துவம் செய்ய மறுக்கிறார்கள். சேத்தூருக்கு கிட்டத்தட்ட 7, 8 கி.மீ. இருக்கின்ற காரணத்தினாலே அவசரமாக கால்நடைகளுக்கு ஏதாவதுநோய் ஏற்பட்டால் கவனிக்க வாய்ப்பு இல்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நான் ஏற்கெனவே கால்நடைத் துறை அமைச்சர் அவர்களிடம் பலமுறை கேள்விகள் கேட்டு இருக்கின்றேன். இந்த ஒரு முறையாவது கருணை கூர்ந்து இந்த சொக்கநாதன் புத்தூரில் கால்நடை மருந்தகம் அமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொக்கநாதன்புத்தூரிலிருந்து சிவகிரி 4 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறது. அதேபோல

சேத்தூர் 5 கி.மீ. தொலைவில் இருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் வேறு மாவட்டங்கள் என்று சொல்லி, மருந்தகத் திற்கு வருகின்ற கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்க முடியாது என்று யாரும் மறுக்கமாட்டார்கள். அப்படி யாரும் மறுத்தார் கள் என்று குறிப்பிட்ட நிகழ்வுகளை என்னிடம் தெரிவித்தால் அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் உறுப் பினர் அவர்கள் அதுபற்றி வற்புறுத்துவார்களானால், அதற்கான கோரிக்கையை உரிய முறையில் அரசுக்கு அனுப்பினால் அதனை தக்க நேரத்தில் கவனித்து அரசாங்கத்தினுடைய நிதி நிலைமைக்கேற்ப பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித் துக் கொள்கிறேன்.

(10-00 மணி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் ஒப்புதலுடன் வினா நேரம் சற்று நீட்டிக்கப்படுகிறது.

கால்நடை மருத்துவமனை.

*3368. **திரு. ஏ. சுப்பு :**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், நாமகிரிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம் மங்களபுரம் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஏ. சுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே நாமகிரிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், மங்களபுரம் என்னுமிடத் தில், கால்நடை மருத்துவமனை அமைப்பதற்கான இடவசதியும் இருக்கிறது. ஊராட்சி ஒன்றியம் பங்குத் தொகையும் தர தயா ராக இருப்பதால், அங்கு உடனடியாக கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு மீண்டும் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர். க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே கால்நடை மருந்தகத்திற்கான கட்டிடம் கட்ட ஊராட்சி ஒன்றியம் நிதி ஒதுக்கிட தயாராக இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார். ஆனால்

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS